# ஜாதிபேதம்

அல்லது

# வர்ணாஸ்ரம தர்மம்.

பேராசிரியர்: டாக்டர். ந. சஞ்சீவி
நினைவாக

இது

திருச்சி

கு. ப. வே. ஆச்சாரியரவர்களால்

எழுதப்பட்டு,

சென்னை சிந்தாதிரிப்பேட்டை

விஸ்வகுலோத்தாரண அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1929.

இதன் விலை அணா 0—2—0

# ஜாதிப்பிரிவினை

# வர்ணாஸ்ரம தர்மம்.

ஜாதியென்பதற்கு வகுப்பு பிரிவு என்று பொருள், குலம், குடி, இனம் என்பதும் ஜாதி யென்ற பொருள் தரத்தக்கவை. ஜாதியைக் குறிக்க வம்சம், வர்க்கம், வர்ணம் என்ற பதங்களும் உபயோகிப்பதுண்டு. ஆங்கிலத்தில்(Class, race kind, tribe) என்று கூறுவர். இப்பதங்களெல்லாம் ஒரே பொருளைக் கொடுப்பினும் அவைகளைப் பிரயோகப்படுத்துவதில் சிறு வித்யாசங்களுள. சாதாரணமாக "நல்ல ஜாதிமரம் நல்ல ஜாதிக்கல்'' என்கிறோம். மரம், கல், அடங்கிய பகுப்பை உணர்த்தும்போது தாவர, தாதுவர்க்கம் என்கிறோம்.

நம்முன்னோரால் வகுக்கப்பட்ட ஊர்வன, பறப்பன, நடப்பன முதலான எழுவகைத்தோற்ற ஜீவராசிகளுள் ஒவ்வொரு ஜாதியிலும் அனந்தம் பகுதிக ளிருக்கின்றன. நாயினத்தில் சடைநாய், கோம்பைநாய் எனப் பலவும், ஆட்டினத்தில் வெள்ளாடு, செம்மறி ஆடு எனப் பலவும் அநேக உட்பிரிவுகள் காண்கிறோம். இவ்வுட்பகுதிகளெல்லாம் அவைகள் பிறக்கப்பட்ட நாட்டிற்கும் சீதோஷ்ணத்திற்கும் தக்கதாயிருக்கிறது. இன்னும் குரங்கை மனுஷ்யன் இனமென்றும், பூனையைப் புலி இனமென்றும், நரியை நாயினமென்

றும், கடம்பையை மானினமென்றும் நாம் வாசி த்திருக்கிறோம். இதனால் தோற்றத்திலும் குண த்திலும் ஒற்றுமைப்பட்டவைகளை ஓர் இனமா கக் கூறவேண்டி யிருக்கிறது.

நாம் இனி மானுஷ்யவகுப்பைப்பற்றி ஆரா ய்வோம். மனுஷ்யன் என்று நாம் யாரைச்சொல் லுகிறோமோ அவர்கள் எல்லோரும் பிறக்கும் தன்மையில் ஒன்றே. ஆனால், அவர்கள் பிறக் கும் பூபாகத்தின் நிலவளநீர்வள அதாவதுகுளிர் வெப்பத்திற்குத் தகுந்தவாறு நிறத்திலும், அங் கக்குறிகளிலும் சற்று வேறுபாடுடையராகி இரு க்கின்றனர். உதாரணமாக, வெய்யில் காணாத குளிரான இடத்தில் முளைக்கும் ஓர் செடி உயர மாகவும் வெண்மைநிறமாகவும், உஷ்ணமான இட த்தில் முளைக்கும் செடி சற்று குட்டையாகவும் கருமையான பசுமை நிறமாகவுமிருப்பதை நாம் பார்க்கிறோம். இவ் வேறுபாட்டைக் காரணமா கக்கொண்டு காக்கேசியர், மங்கோலியர், நீகிரோ வர் என மூன்று முக்கிய வகுப்புகளாக (Three races of mankind) மனுஷ்யஜாதியைப் பிரித் திருப்பதாக வாசித்திருக்கிறோம். ஐரோப்பாவில் அதன் கீழ்ப்பாகமாகிய காக்கஸஸ்பிரதேசங்களி லிருந்து மத்ய ஆசியா, இந்தியா முதலிய இடங் களில் வசிப்பவர் "காக்கேசியர்" என்றும் சீனா, ஜப்பான் முதலிய இடங்களில் வசிப்பவர் "மங் கோலியர்" எனவும், அதிஉஷ்ணமான ஆபிரிக்கா கண்டத்தில் வசிப்பவர்கள் "நீகிரோவர்" எனவும் சொல்வதுண்டு. இவ்விதம் பாகுபாட்டில் நாமெ ல்லோரும் காக்கேசிய வகுப்பைச் சார்ந்தவர்.

இவ்விதமிருக்க, நாம் சொல்லிப் போராடும் ஆயிரக்கணக்கான வகுப்பு உண்டானகாரணம் என்னவென்று பார்ப்போம். இஃது சிருஷ்டியிலே கடவுளால் உண்டாக்கப்பட்டதா அல்லது நாமே நாம் வகுத்துக்கொண்டோமா வென்று பார்க்குமளவில் எல்லாம் நாமே பிரிவினைசெய்து கொண்டதாக உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகிறது.

நாகரீகத்தில் முதன்மையாகச் சிறந்து விளங்குவதாகக் கூறும் ஐரோப்பாக்கண்டத்தைப் பற்றிப் பேசுவோம். பூர்வத்தில் கேவ்மென் (Cavemen) ஐபேரியன்ஸ் (Iberians) கெல்ட்ஸ் (Celts) என மூன்று பிரிவுகள் ஏற்பட்டிருந்ததாக அவர்கள் சரித்திர வாயிலாக அறிகிறோம். தற்போது, பிரித்தானியர், ரோமானியர், ஜெர்மானியர், டேன்சுக்காரர், பிரஞ்சுக்காரர். ருஷியர் எனப் பலவகையான வகுப்புகள் (Nations) இருக்கின்றன. ஆசியாவிலும் அரேபியர், துருக்கியர், பாரஸீகர், சீனர், ஜப்பானியர் எனப் பல விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இம்மாதிரியாகவே ஒவ்வோர் நிலப்பகுதிகளாகிய கண்டங்கள், தேயங்கள்தோறும் ஜாதிகள் பலவாறு கப்:பிரிக்கப்பட்டுளது.

இந்தியாவிலும் இதுபோலவே ஆந்திரர், திராவிடர், சௌராட்டிரர், மராட்டியர், பாஞ்சாளர், கன்னடியர், மலையாளர், கொங்கணர், வங்காளர், சோழியர் எனப் பலவகையான ஜாதிகள் பூர்வத்திலிருந்த நமது நாட்டின் பகுதிகளால் ஜாதிகள் ஏற்பட்டிருக்கின்றன.

இச்சாதிகளெல்லாம் ஒரு வீட்டில் சகோதரர்கள் ஏக குடும்பமாய் பெற்றோர்களுடன் கூடிக் குலாவி ஒற்றுமையாயிருக்கும் சமயத்தில் "நாம தனித்திருந்தால் நமது சம்பாத்யத்தில் மீதிசெய்து நம்மிஷ்டப்படிச் சாப்பிடலாம், நம்பெண்டு பிள்ளைகட்கு ஏராளமான ஆபரணங்களையும் உயர்ந்த பட்டாடைகளையும் வாங்கிக்கொடுத்து அவர்கள் தரிப்பதைக்கண்டு ஆனந்தமடையலாம்" என்ற இயற்கையாயுள்ள அற்பத் தன்மையான அறியாமையாலுண்டான சுயநலத்தை (Selfishness)க் கருதி ஏகமாயிருந்த குடும்பத்தைவிட்டுத் தனித்தனி வீட்டைப் பாகித்துக்கொண்டு இவ்வெல்லைக்குட்பட்டது கமல விலாஸ், ஸ்ரீநிலையம், எனப் பெயரிட்டு நான் இன்னவீட்டுக் குடையவனென்பதுபோல், ஒவ்வொரு கூட்டத்தாரும் விசாலமான பூமியில் அவரவர்கள் ஓர் எல்லையை ஏற்படுத்தி அதற்கு ஒரு பெயர்கொடுத்து அவ்வூரிலுள்ளோர் எனப் பிரிவுபட்டிருக்கின்றனர்.

அதற்குத் திருஷ்டாந்தமாக நமதுசென்னை மாகாணமாகிய தமிழ் நாட்டில் அநேக ஜாதிப் பிரிவுகளுள் ஒன்றான வேளாளர் ஜாதியில் காரைக்காட்டார், சோழியரெனவும், முதலியார் வகுப்பில் தொண்டைமண்டலத்தார், பூந்தமல்லியார், பொன்னேரியாரெனவும், பார்ப்பனரில் வடமன், பழமானேரி, மழநாடு எனவும், கம்மாளருள் வெம்பாய்நாட்டார், மலைநாட்டார், சோழியரெனவும் பலவகையான உட்பிரிவுகள் கூறக் கேட்கிறோம். இவைகளெல்லாம் அவரவர்கள் வாசஞ்செய்த நாட்டின் பெயரன்றி வேறல்ல. இப்பிரிவுகட்கெ

ல்லாம் மூலகாரணம் மேலேசொல்லிய சுயநலம் ஒன்றேயன்றி வேறு சொல்வதற்கு நான் முன் வரவில்லை.

இத்தகையான ஸ்தலத்தைப்பற்றிய பிரிவுகள் ஒருவாறிருக்க, கொல்லன் (Smith), தச்சன் (Carpenter), சிற்பி (Architect) வேள்ளாளர் (Agriculturists), கைக்கோளர் சேடியர்(Weavers), எனப் பிரதமத் தொழிலைப்பற்றிய பல பிரிவுகளும் (Division by Labour) எங்கும வழங்கி வருகிறதுண்டு. இன்னும் பலவான் பாத்ய அதிகாரி (Might is right) என்றவசனப் படி வல்லமையுள்ளவர்கள் தங்கள் தேகபலத்தைக் காட்டிச் சக்தியற்றவர்களை அடக்கி அவர்களை ஜெயித்து தலைமைவகிக்க எண்ணங்கொண்டு தமது அதிகாரத்திற் குட்பட்ட சிலரைப் பணிவிடைகள் செய்யவும், தங்களைப் பாதுகாக்கவும், தங்களுக்கு வேண்டிய பொருள் முதலானவைகளைச் சேகரித்துத் தருவதற்கும் சில ஏவலாளர்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால், நாகரீகம் அதிகப்பட அவைகளெல்லாம் கவர்ண்மென்ட் (Government) என்றும், டிபார்ட்மென்ட் (Department) என்றும் மாறுபாடடைந்து ஜனங்களின் நன்மையைக் கோரினதாகவே காட்டப் படுகின்றன.

ஆனால், நமது இந்தியாவில்மட்டும் பூர்வ அரசர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏவற்றொழில்களால் (Department of Functions) பெயரிடப் பட்ட பறையர், கள்ளர், காவற்காரர், அகம்படியார் (அரண்மனை ஊழியக்காரர்) காணியாளர்,

கார்காரத்தார், வேதியர், அஷ்டசாஸ்திரம், பார்ப்பார், ஓதுவார், வண்ணார், சக்கிலியர், பரிஹாரி, மேளக்காரர், நாயக்கர், வாணியர், தட்டார் இது போன்ற சில வகுப்புகள் இன்னும் மாறவில்லை. இப்பிரிவுகளெல்லாம் அவரவர்கள் ஜீவனோபாயத்திற்கு செய்துவந்த தொழிலினாலன்றி பிறப்பினாலல்ல,

தற்காலத்தில் இப்பெயர்களை கல்விமான்கள் தங்கள் கல்வி சாமர்த்தியத்தால் புகழ்ந்தும் இகழ்ந்தும் பேசக்கூடும். உதாரணமாகப் பார்ப்பான் வேதம் பார்ப்பவனென்றும், சுற்றுமுற்றும் பறிக்கப்பார்ப்பவன் என்றும், தட்டான் தட்கட்டென்று தட்டுகிறவனென்றும், ஒருவர் சொல்லையும் தட்டமாட்டானென்றும் பலவாறு சொல்லலாம். ஆனால், இதில் புகழப்படுவதுமில்லை இகழப்படுவதுமில்லை.

நிற்க, நாம்வீதியில் ஒருவனைக்கண்டு நீயார்? (Who are you ?) என்று கேட்போமாயின் அவன் நானொருபிச்சைக்காரன்(I am a beggar அல்லது நான் ஒரு தச்சன் (I am a Carpenter) என்று, தான் செய்துவரும் தொழிலினால் தான் இன்னவனென்று சொல்வதைத் தவிர வேறுவிதமாகச் சொல்லக் கேட்டிலோம். சாதாரணமாக, தச்சுவேலை செய்துவரும் மகம்மதியன் (என்று சொல்லும்) ஒருவனை தச்சன் என்கிறார்களே தவிர 'சாய்பு' 'நவாப்'என்றழைப்பதில்லை இன்னும், கடைவைத்து வியாபாரம் செய்யும் பார்ப்பான் (என்று சொல்லும்) ஒருவனை ஒரு வழிப்போக்கனொருவன் "ஓய் செட்டியாரே" என்ற

ழைப்பது சகஜமே தவிர "ஓய் புரோஹிதரே" என்றழைப்பதாகக் கேட்டிலோம். ஆகையால், தொழிலினாலே ஜாதி யடையாளங்கள் ஏற்பட்டிருக்கிறதென்று நாம் நன்குணர்ந்தும் தற்போதுள்ள அரசாட்சியின்கீழ் உண்டாயிருக்கும்படியான டிபார்ட்மெண்ட் (Department), சொஸயட்டி (Society), அஸோஸியேஷன் (Association) என்ற ஒவ்வொரு கூட்டத்தையும் ஏன் ஒரு ஜாதியாகச் சொல்லக்கூடாது? இன்னும், வக்கீல் வகையறுவை ஒரு ஜாதியாகவும், வாத்தியார்களை ஒரு ஜாதியாகவும், குமஸ்தாக்களை ஒரு ஜாதியாகவும், கணக்கர்களை ஒரு ஜாதியாகவும், சேவகர்கள், தோட்டிகள் இவர்களை ஒவ்வொரு ஜாதியாகவும், அழைக்க இடம் தரவில்லையோ? சொல்லுவதில் தோஷ மேதேனுமுண்டோ ?

தற்போதிய டிபார்ட்மெண்டுகளில் எடுகேஷன் (Education Department) டிபார்ட்மெண்டிலுள்ளவர்கள் உயர்ந்தவர்களா? இஞ்சினீரிங் (Engineering) அக்ரிகல்ட்சரல் (Agricultural) டிபார்ட்மெண்டிலுள்ளவர்கள் தாழ்ந்தவர்களா? ஒருவனே பல தொழிலுடையவனா யிருந்தால் அந்தந்த சமயத்தில் அந்தந்த தொழிலின் பெயரால் அழைக்கப்படுவான். ஒருவன் கடையில் கணக்கு எழுதும்போது கடைக்கணக்கன் என்றும், அவனே அவகாசம் நேர்ந்தபோது குழந்தைகட்கு பாடம் கற்பிக்குங்கால் வாத்தியாரெனவும், வைத்தியம் செய்யும்போது வைத்தியரெனவும், கோயில்பூஜை செய்யும்போது பூசாரியெனவும் அழைக்கப்படுவான்.

உதாரணமாக, நமது கலெக்டர் அவர்களை ரிவன்யூ ஆபிஸராக இருக்கும்போது கலெக்டர் எனவும், மேஜிஸ்டிரேட் காரியம்பார்க்கும்போது டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் எனவும், டிஸ்டிரிக்ட் போர்டு பிரசிடென்ட் என்றும்,......கிளப் சிகரடரி யென்றும் பலவிதமாகப் பெயரிடப்பட்டாலும் மனுஷ்யர் ஒருவரே.

இன்னும் பல டிபார்ட்மெண்டிலுள்ள சேவகர்களை உத்யோக உடுப்பில்லாமல் ஓரிடத்தில் கூட்டி அவ்வாட்களைத் தெரியாத மூன்றும மனிதன் ஒருவனை அவர்களை டிபார்ட்மெண்ட்வாரியாக பிரிக்கச்சொன்னால் இயலுமா? அவர்களுக்கென்று ஏற்படுத்திய உடையையும் (Dress), வில்லையையும் (Badge) போட்டுக்கொண்டபோது இது போலீஸ், ஸால்ட், எடுகேஷனல், ரிவன்யூ, இஞ்சினீரிங் என்று பலவிதமாகப் பிரிக்கலாம். அதுபோலவே காது, மூக்கு குத்துதல் முதலிய ஜாதீய சின்னங்கள் செய்யாத ஆயிரக் கணக்கான சிறு குழந்தைகளை ஆடையாபரணமின்றி ஓரிடத்தில் கூட்டி அதில் தற்போதுள்ள ஜாதி பேதப்படி குழந்தைகளை பொறுக்கி எடுக்க முடியுமா? அல்லது கவர்ன்மெண்டார் அவரது அதிகாரத்திற்குட்பட்ட பிரஜைகள் எல்லோரையும் ஒரேவிதமான பாஷை, நடையுடையவர்களாக யிருக்கும்படி செய்துவிட்டால் எவ்வித ஜாதி வித்யாசம் எள்ளளவும் கண்டுபிடிக்க முடியுமா? ஆகையால் மேற்கூறிய அனுபவ உதாரணங்களால் நாம் ஆண், பெண் என்ற இரண்டு இயற்கை அமைப்பான ஜாதியைத் தவிர வேறு

பிரக்கமாட்டோம். ஒருவருக்கொருவர் அடையாளம்கண்டுபிடிக்க நாம் இராமன், கோவிந்தன்' ஜோஸப், கரீம் என்று பெயர் வகித்துக்கொள்வதுபோல ஒரு கூட்டத்திற்கு ஒருபெயர் குறிப்பிட்டிருக்கிறதென்று நம்பவேண்டியது அவசியம். இதனுல் ஏற்றத் தாழ்வு அறிவுள்ளோர் கூறூர்.

இந்தியாவில் இன்னும் எந்தெந்தவிதமான ஜாதிப்பிரிவினை உண்டென்று ஆராயப்புகின், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு பெரிய வகுப்புகள் உள்ளதாகவும், அதில் பிராமணரென்போர் பிரமாவின் முகத்திலிருந்து உண்டானூரென்றும், க்ஷத்திரியர் மார்பிலிருந்து உண்டானூரென்றும், வைசியர் தொடையிலிருந்து உண்டானூரென்றும், சூத்திரர் பாதத்திலிருந்து உண்டானூரென்றும், சிரசிலிருந்து உண்டான பிராமணர் உயர்ந்தவரென்றும், மற்றையோர் அன்னோர்களைக் காட்டிலும் படிப்படியே தாழ்ந்தவர்களென்றும், அதிலும் சூத்திரர் மிகக் கேவலமானவர்களென்றும், இவைகளெல்லாம் வேதத்திற் சொல்லப்படுகிறதென்றும் சொல்லக் கேட்கிறோம். இவ்வாறு கூறப்பட்ட பிறப்பு இயற்கைக்கு விரோதமாயிருப்பதுந் தவிர மற்ற நாட்டாரின் ஏளனத்திற்கு ஈடுபட்டதா யிருக்கிறது. மேலும், இம்மாதிரிப் பிரிவினைகள் நமது நாட்டில் மட்டும் வழங்கிவருகிறதே தவிர இதர தேயங்களி லிருந்ததாகவும் இருப்பதாகவும் தெரியவில்லை.

ஆரியரெனும் ஒருவகைக் கூட்டத்தார் சிந்துநதி தீரமாகிய இந்தியாவிற்கு குடியேறிய கால முதல் மேற்கூறிய ஜாதிப்பிரிவுகளும், வேதம், சுருதி, ஸ்மிருதி, இதிகாச புராணங்களும் உண்டாக்கப்பட்டன வென்று சரித்திரங்களால் தெரியவருகிறது. இன்னும் இச்சாதிகளில் உயர்ந்தோரென்று சொல்லிக்கொள்ளும் பிராமணர் என்னும்வகுப்பார் தாங்கள் ஆரியரென்றே சொல்லிக்கொள்கிறார்கள். தென்னிந்தியாவில் இவர்களல்லாத மற்றவர்களைத் திராவிடர், பஞ்சமர் என்று சொல்வதுண்டு. ஆரியர் இந்தியாவிற்கு வருவதற்குமுன் இவ்வெல்லைக்குள் எந்தவிதமான மனிதர்கள் இருந்தார்களோ? இருந்தால் அவர்கள் கடவுள் சிருஷ்டிக்கு வேறுபாடுடையரோ? வேதம், சுருதி, ஸ்மிருதி முதலிய சாஸ்திரங்கள் அக்காலத்தில் இல்லாத காரணத்தால் அவர்கள் காட்டுமிருகங்களைப்போல் கண்ட ஆகாரத்தை உண்டு புசித்தனரோ? கடவுளால் தாங்கள் சிருஷ்டிக்கப்பட்டவர்களென்று உணர்ந்தார்களோ?—என்பது ஒரு பெரிய சந்தேகம்.

ஆரியருக்குப் பின் வேதம் உண்டாக்கப்பட்டதென்றால் வேதம் எவ்விதம் ஆதியாகும், சத்தியமாகும்? வேதம் (அறிவு) என்பது எழுதி வைக்கப்பட்டதல்ல வென்றும் கடவுளால் சொல்லக்கேட்டதென்றும்சொல்லுகிறார்கள். (அறிவு சிருஷ்டிகாலத்திலேயே உண்டாக்கப்பட்டதென்பது நம்பத்தக்கது) வேதம் கடவுளால் ஒருவருக்கே உபதேசிக்கப்பட்டதா அல்லது அவரது சிருஷ்டிக்குட்பட்ட எல்லோருக்குமே சொல்லப்

பட்டதா? வேதம் ஒருவருக்கே உபதேசிக்கப்ப ட்டதென்றால் உபதேசிக்கப்பட்ட அவர், உப தேசம் பெறுவதற்குமுன் ஆரியரா அதாவது ஆ ரியக்கூட்டத்தாருள் ஒருவரா? அவ்வுபதேசம் பெற்றபின்னர் ஆரியரென அழைக்கப்பட்டாரா? அவ்வாறு உபதேசிக்கப்பட்ட வேதத்தில் உப தேசம்கேட்ட ஒருவரைப்பற்றி மட்டும் சொல்லி யிருக்கிறதா அல்லது அவரது இனத்தைப்பற்றி மட்டும் சொல்லியிருக்கிறதா, அல்லது மற்ற எல் லோரையும்பற்றி சொல்லியிருக்கின்றதா, வேதத் தில் சொல்லப்பட்ட நான்கு வர்ணமும் ஆரிய வகுப்பிற்குட்பட்டதா? அல்லது முதல் வகுப் பார்மட்டும் ஆரியரா?-என்ற பிரஸ்னைகள் கேட்க இடமுண்டு. அறிவிற் சிறந்த பரிபக்குவமான ஒருவருக்கே வேதம் என்பதை உபதேசித்து இதை உலகிற் பரவச்செய் என்று சொல்லியிருக் கக்கூடும். அவ்வாறு ஞானோபதேசம்பெற்றபின் எவரும் ஆரியர், மேலோர், பெருந்தன்மை யுள் ளோர் ஆகக்கூடும்.

ஆரியரென்ற கூட்டத்தார் இந்தியாவிற்கு வருவதற்கு முன்னும் வேதம் ஏற்படுவதற்கு முன்னும் இந்நான்கு விதமான ஜாதிப்பிரிவினை இவ்வெல்லைக்குள் கிடையாதென்று சரித்திரங் களே கூறுகின்றன. அதற்கு வேதம் என்றப தமே அத்தாட்சி (அதாவது அறிவு ஏற்பட்ட பின்னர் விஷயங்களைப் பாகுபாடு செய்யமுடியு மென்பது உண்மை) வேதத்தில் சொல்லப்பட்ட நான்கு வர்ணமும் ஆரிய வகுப்பிற்குள் பிரிக்கப் பட்டதல்லவென்றால் மானுஷ்ய கோடிகளின்

பகுப்பைக்காட்டுகிற தன்றோ,, ஆரியருச்குள் மட்டும். நான்கு வர்ணமும் பிரிக்கப்பட்ட தென்று ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் அதிலுள்ள நான்கு வர்ணத்தோறும் ஆரியர் தானே வேதத்திற்கு உரிமைக்காரர்கள்தானே. அப்படியிருக்க, சூத்திரரை ஆரியரல்ல வென்பதற்கும் அவர்களுக்கு வேதத்தில் சுதந்தரங்களில்லையென்பதற்கும இடமேது?

இந்தியாவில் பீனல் கோட்சட்டம் (Penal Code; இந்திய கவர்ன்மெண்டார் ஆளுகைக்குட்பட்ட ஜனங்களைப்பற்றி யென்றால் நியாயாதிபதிகள் மட்டும்தான் அறியவேண்டுமோ வக்கீல்களும் மற்றக் குடிபடைகளும் அதைப் பார்த்து சட்டங்களைத் தெரிந்துகொள்ளக் கூடாதென்பது சரியாகுமா? இத்தன்மைபோல வேதத்தைப் பிறர்பார்க்கூடா தென்பதும் மற்றொருவருக்கும் சொல்லிக் கொடுக்கக்கூடா தென்பதும் நம்மிடமிருக்கும் வஞ்சசமான புத்தியல்லவா? மனிதனுக்கு அறிவு எப்போது ஏற்பட்டதோ அப்போதே அறிவைப் புகட்டிய அமலனைப்பற்றி ஆராயவேண்டு மென்ற சித்தாந்தத்தினுல் அவன் வேதத்திற்குப் பாத்தியப்பட்டவனல்லவா? பூரண அறிவாகிய வேதத்தில் வஞ்சக மென்பது எவ்விடத்திலேனும் காணக்கிடைக்குமா வேதகர்த்தா நம்மைப்போன்ற அற்பபுத்தியுடைவரா?

ஓர் வீட்டில் எரியும் தீபம் எல்லோருக்கும் பொது என்று அவ்வீட்டிலிருக்கும் ஒரு சிறு குழந்தை தீபத்தைப் பிடிக்கமுயல்வது, தான்

கையையும் சுட்டுக்கொண்டு தீபத்தையும் சவிழ்த்து வீட்டிற்கும் ஹானி உண்டாக்கக் கூடுமென்ற சில உதாரணங்களால் வேதத்தில் சிலருக்குப் பாத்தியமில்லை யென்று தடை சொல்ல சிலர் முன்வரலாம். பார்வைக்கு குழந்தையாக் காணப்பட்ட கிருஷ்ணபகவான் தன்வாயில் சர்வஜெகத்தையும் காட்டினாரென்று அவர்கள் சொல்வது கட்டுக்கதையா? இசகேள்விக்கு அவர்கள் மௌனம் சாதிக்கவேண்டி வரும்

மேற்கூறிய முதல் உதாரணத்தில் தீபத்தின் பிரகாசம் எல்லோருக்கும் பொது எனப தைக்கொள்ளவேண்டும்.

ஆனால், அதைப் பரம்பரையாய் ஒருவருக்கொருவர் சொன்னபோது கேட்பவர் பரிபக்குவத்திற்கும், திரும்பவும் ஞாபகப்படுத்தி பிறருக்குச் சொன்னவர் பரிபக்குவத் திறமைக்கும் தக்கவாறு மாறி மாறியே பலவித சுருதி ஸ்மிருதிகளாக ஏற்பட்டு வர வர தங்கள் அறியாமையாலும், சுயநலத்தாலும் ஜனங்களின் கிரஹிக்கிற சக்திக் குறைவாலும இதிகாச, காவிய புராணங்களாகி கடைசியில் கதைகளாகவும், நாடகங்களாகவும் வந்துவிட்டன.

இம்மாதிரியான மாறுதல்களினாலே வந்த தீங்குதான் தற்போதுளள வர்ணச்ரம தர்மம். வேதத்திற் சொல்லப்படுவதாகக் கூறும் நான்கு வருணங்களும் லோகார்த்தமானதன்று. இது தத்வார்த்த முள்ளது. சாதாரண அறிவுக்குப் புலப்படாதது. இவன் பிராமணன் இவன் க்ஷத்திரியன் எனக் கண்டுபிடிக்க முடியாதது. இந்

நான்கு வர்ணமும் பகவான் அவர் சிருஷ்டித்த மானுஷ்ய கோடிகளுடைய அந்தரங்க எண்ணத்தைப் பரீக்ஷிக்கும்படியான மாதிரி ஆணிகள் (Types of Moral character) என ஆஸ்திக புத்தியுள்ளவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடும். ஆனால், தற்போது சிற்சில சின்னங்களான வேடங்களைத்தரித்து மமதையினாலே நான் பிராமணன், மேலானவன் என்று அபிநயிப்பது கதைக்காக கன்னிவேடம் பூண்ட புருடன் காரியத்திற் குதவும்படியான பெண்ணாகுமா?

இதைப்பற்றி தற்போது பிராமணரெனச் சொல்லிக்கொள்வோர் தங்களுக்கு ஆதாரமாக வைத்துக்கொண் டிருக்கும் வேதசாரமாகிய சாஸ்திரங்களில் ஒன்றாகிய பகவத்கீதையில் நான்காவது அத்யாயம் 13-வது ஸ்லோகத்தில்—

"சாதுர் வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் குணகர்ம விபாகஸஹ." "நான்கு ஜாதியும் குண கர்ம என்ற வற்றின் பலவகையான அளவிற்குத் தக்கவாறு என்னால் சிருஷ்டிக்கப்பட்டன" என்று பகவான் சொல்லியிருக்கிறார். சர்வலோக நாயகனான பகவான் சொல்வ தென்றால் பூமியில் ஒரு பாகத்திற்கு மட்டும் சொல்வாரா? ஆரியருக்கு மட்டும் சொல்வாரா? அவர் அவ்வளவு பக்ஷபாத முள்ளவரா?

நிற்க, அவர் சொல்லி யிருக்கிற ஸ்லோகத்தின் தாத்பர்யத்தைக் கவனிப்போம். அதில் சொல்லிய 'குணகர்ம' என்ற பதத்திற்கு (1) குணம் கர்மம் என்ற இரண்டிற்குத் தக்கவாறு என்றும் (2) குணத்தாலாகிய கர்மத்திற்குத் தக்

கவாறு என்றும் அதாவது மனிதர்க்கு, (1) குணங்களாலும், அவர்கள் ஜெகத்தில் செய்து வரும் தொழிலினுலும் என்றும் (2) குணங்களால் ஏற்பட்ட கர்மம் அல்லது தொழிலினுலும் முறையே ஜாதிகள் ஏற்பட்டதென்றும் பொருள் கொள்ள இடமுண்டு.

பகவானே பகவத்கீதை இரண்டாவது அத்தியாயம் 45-வது ஸ்லோகத்தில் ''த்ரைகுண்யோ விஷயா வேதாஹ நிஸ்த்ரை குண்யோ பவார்ச்சுன'' அதாவது, "வேதங்கள் முக்குணங்களையும் விஷயமாக உடையன'' என்று சொல்லிருக்கிறுர். ஆகையால் குணங்களில்லாதார் யார்? வேதத்தில் பாத்யமில்லாதார் யார்? தாமஸ, இராஜஸ, சாத்வீக என்ற முச்குணங்களுச்கும் அதீதன்பகவான் ஒருவரே. அவரன்றி மறமேனேயோர்க்கும் வேதத்தில் பாத்யமுண்டு.

குணமென்பது மனதில் உதிப்பது, பார்க்க முடியாதது (Abstract). அதை விகாசப்படுத்துவது கர்மம் (தொழில்). இது பார்க்கக் கூடியது (Concrete) பகவத்கீதை மூன்ருவது அத்யாயம் 5-வது ஸ்லோகத்தில் ''இயற்கையில் தோன்றிய குணங்கள் ஒவ்வொன்றும் சுவாதீன மற்று கர்மத்தில் செலுத்தப்படுகின்ற தாதலால் ஒன்ருவது எக்காலத்தும் ஒரு க்ஷணப்பொழுதாயினும் தொழிலைச் செய்யாததாக இருப்பதில்லை. ஆகையால் குண மென்பது அவசியம் தொழிலைச் செய்தே தீரவேண்டும்.

ஆகையால், பகவான் கருத்துப்படி நாம் ஜாதிபிரிக்கவேண்டு மென்ருல் சாத்வீக குணங்

களாகிய சாந்தன், பக்தன், புத்திமான், மெய்யன், சுத்தன், சாருண்யன், அடக்கமுள்ளவன் எனவும், இராஜஸ குணங்களாகிய வீரன் சூரன், சுறுசுறுப் புள்ளவன், புத்தி கூர்மையுள்ளவன், துணிச்சலானவன் எனவும், தாமஸ குணங்களாலான மந்தன், மூடன், கபடி. சூதுள்ளவனெனப் பலவாருகப் பிரிக்கப்படவேண்டும்.

இன்னும் பகவான் 18-வது அத்யாயம் 41-முதல் 44-வது ஸ்லோகங்களில் அவரால் பிரிக்கப்பட்ட ஜாதியின் கர்மலக்ஷணங்களைக் கூறியிருக்கிறூர்.

41. "பிராஹ்மண க்ஷத்ரியவிஸாம் சூத்ராணும்ச பரந்தப, கர்மாணி பிரவிபக்தானி ஸ்வபாவப்ரபவைர் குணைஹி."

42 "ஸமோ தமஸ்தபஸ் செளசம் ஷாந்திரார்ஜவமேவச, ஞானம் விக்ஞான மாஸ்திக்யம் ப்ராஹ்மம்கர்மஸ்வ பாவஜம்"

43. "ஸெளர்யம் தேஜோ த்ருதிர்தாக்ஷயம் யுத்தேச்சாப்ய பலாயநம், தாந மீஸ்வர பாவஸ்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்."

44. "கிருஷிகோரக்ஷய வாணிஜ்யம் வைஸ்யம் கர்மஸ்வபாவஜம், பரிசர்யாத்மகம்கர்மசூத்ர ஸ்யாபிஸ்வ பாவஜம்". (இதன் பொருத்தம்)

41. "ஸ்வபாவத்தால் உண்டாகும் குணங்கட்கு ஏற்ப பிராமணர் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்கட்கு கர்மங்கள் ஏற்பட்டன"

42. "ஸ்வபாவத்தா லுண்டான அறிவும், அடக்கமும், தவமும், சுத்தமும், பொறுமையும், நேர்மையும், அறிவும், அனுபவமும் ஆஸ்திகத்

தன்மையும் பிராமணத் துவத்திற்குரிய கர்மங் கள்'' இவைகளெல்லாம் ஸாத்வீக குணங்களா லானவை.

43 ''ஸ்வபாலத்தா லாகின்ற சூரத்தன்மை யும், துணிபும், திட்பமும், கூர்மையும், யுத்தத் தில் பின்வாங்காமையும் தானமும் ஆட்சியும் க்ஷத்திரியத்வத்திற்குரிய கர்மங்கள்'' இவைகள் இராஜகுணங்களா லானவை.

44. ''கிருஷித்தொழில் செய்தலும் பசுக்க ளைப் பரிபாலித்தலும் வியாபாரங்கள்செய்தலும் வைசியத்திற்கு ஸ்வபாவமான கர்மங்கள் மற்றும் ஸ்வபாவீகமான ஊழியத்தன்மையானவை சூத் திரத்துவத்தினுடைய கர்மங்கள்'' இவைகளெல் லாம் தாமஸ குணங்களாலானவை.

மேற்கூறிய ஸ்லோகங்களினால் குணங்களால் வர்ணங்கள் பிரிக்கப்பட்டதென கரதலா மலகம் போல் விளங்குகின்றதல்லவா?

இதுபோலவே ஆச்ரமம் என்பதும் மனித ர்களுடைய ஓர்விதப் படித்தரமான தன்மை தான் (Different stages of life). அஃதும் பிர் மசரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியா சம் என நான்குவகுப்புகளாக பிரிக்கப்பட்டுளது.

பிர்மசரியம்—என்பது (Student life) தன க்கு ஸ்வபாவீகமான அறியாத்தன்மையை நிவர் த்திக்கும்பொருட்டு ஒரு ஆச்சாரியனை யடைந்து அவருக்குக் கீழ்ப்படிந்து அவர் உபதேசவாயி

கச் சொல்லும் ஒவ்வொரு புத்திமதியையும் சிரவணம், மனனம்செய்தும் ஜீவனைக் காப்பாற்றுதற்கு வேண்டிய தொழில்களை அவர் காட்டியபடி கற்றுணர்ந்து லோக ஹிதத்திற்கு தன்னுலான உதவியை தேகத்தால் மட்டும் உழைக்கும் ஸ்திதி.

கிரஹஸ்தம்—என்பது (Household life) ஆச்சாரியனை விட்டு தனக்குத் துணையாக ஒரு மனைவியைத்தேடி தான் ஆசரியரிடம் கற்றுணர்ந்த லோகஹிதமான வேளாண்மை, வாணிபம் இவைகளால் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு கஷ்டப்பட்டு தனத்தைத்தேடி தானுமனுபவித்துப் பிறர்க்கும் பலா பேட்சையின்றி பரோபகாரம் செய்யும் தன்மை.

வானப்பிரஸ்தம்—என்பது தான் மனையாளோ டிருந்தோ அல்லது மனைவியை விட்டோ ஓர் வனத்தை யடைந்து பஞ்சேந்திரியங்களோடு சண்டையிட்டுக் கடுமையான தபஸ்புரிந்து இந்திரிய நிக்கிரகம் செய்து லோகத்திற்கு யாதொரு தீங்குவரக் கூடாதென்று லோகத்தைப் பாதுகாக்கும் வண்ணம் உடல், பொருள், ஆவி மூன்றையும் பிறர்பால் அர்ப்பணம்செய்யக்கூடியநிலைமை.

சந்நியாசம்—என்பது தான்தேடிய சேதனமான மனைவி, மக்கள், பொருள் முதலானவைகளையும் அசேதனமான தபஸ், ஞானம் முதலானவைகளையும் தனக்கு வேண்டியதில்லை யென்று லோகஹிதத்திற்கு எவ்வித கைம்மாறும் கருதாமல் தத்தம் செய்யச் சித்தமாயிருக்கும் சுபாவம்.

இவ்வாச்ரமம் நான்கும் மனிதருக்கு பால்யம் யௌவனம், மூப்பு எப்படியோ அப்படியே படித்தரமா யுள்ளது. ஆனால் எல்லாம் மனதின் ஸ்வபாவம். முற்கூறிய பிராமண, க்ஷத்திரிய, வைசிய. சூத்திர நான்கு வர்ணங்களும் முறையே சந்நியாச, வானப்பிரஸ்த, கிரஹஸ்த, பிரமச்சர்ய ஆச்ரமத்தைக்குறிக்கிறதென் சில முதிர்ந்த அறிவாளிகளின் கொள்கை. ஆனால், தர்க்க சாஸ்திர நிபுணர்கள் சுருதிகளில் வர்ணாச்ரமத்தை தர்மங்களில் ஒன்றாக தனியாகக் கூற நியாயம் என்னவென்று கேட்காமலிரார். அவர்கட்கும் பதில் சொல்லக்கூடும். இவ்வத்யாய ஆரம்பத்தில் நான் கூறியிருக்கிறதுபோல் சுருதிகளை நாம் அப்படியே நம்பவேண்டுமென்பது அவசியமல்ல. அவைகள் நாளுக்குநாள் மாற்றப்பட்டே வருகின்றனவென்று எல்லோரும் ஒப்பத்தகுந்தது. ஏனெனினும் படித்தரமாயுள்ள ஒவ்வோர் ஆச்ரமத்திலும் திரிகுணத்தின் தன்மையாலாகிய வர்ணங்களை ஒத்துப்பார்ப்பதுதான் வர்ணாச்ரமம் என்றுசொல்ல இடம்தரும். இதை அனுஷ்டிப்பது தர்மம். ஆகவே வர்ணாச்ரம தர்மமென்ற பெயர் வழக்கத்திற்கு வந்திருக்கிறது.

அதாவது முதற்படியிலுள்ள பிரமச்சர்ய ஆச்ரமத்தில் தாமஸ குணத்தாலான சூத்திரத் தன்மை யுள்ளவனா இராஜஸ குணமான க்ஷத்திரியத்தன்மை யுள்ளவனா என்று விசாரிப்பது தான். இவ்விதம் பார்க்கப்புகின் 48-பிரிவுகள் ஏற்படும். பின்னும் திரிகுணத்தை தமஸில் தம

ஸ், தமஸில் ரஜஸ், தமஸில் சத்வம் என்று ஒவ்வொன்றையும் மூன்றாகப் பிரித்துப் பார்த்தால் 144 பிரிவுகளாகும்.

இதைப்பற்றி ஆராய்ந்து வாதாடுவதெல்லாம் மூளைக்கு வீண் செலவே. இஃதெல்லாம் மனிதர்கள் ஒருவருக்கொருவர் விசாரித்துக்கொள்ள வேண்டுவதில்லை. நம்மைப் படைத்த கடவுள் தான் அவரால் உபதேசிக்கப்பட்ட தர்மங்களாகிய சட்டங்களை சரிவர நடத்தினவர் யாரென்று சீர்தூக்கிப் பார்க்கவேண்டியவர். அவரது சட்டங்களாகிய உறைகல்லில் நமது குணங்களாகிய மாற்றை உறைத்து வரையறுக்கும்வல்லமையுள்ளவர்.

ஆகையால் நாம் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு பேசுவது எங்ஙனம் கூடும்?

இன்னும் புருஷசூக்தம் 5-வது 6-வது அனுவாகத்தில்

"பிராஹ்மணோஸ்ய முகமாஸித் பாஹூராஜன்ய கிருதஹ, ஊருததஸ்யத் வைஸ்ய பதப்யாக் ஸூத்ரோ அஜாயத"

"விராட் புருஷனுக்கு பிராமணன் முகமானான், க்ஷத்திரியன் கைகளாக செய்யப்பட்டான், தொடைகள் வைசியன், பாதத்திலிருந்து சூத்திரர்கள் உண்டானார்கள்"

இதன்கருத்தை நன்றாய்க்கவனித்தால் பல வகையான பொருள்கொள்ளக்கூடும். அதில் பின்வருவதும் ஒன்றாகும். "உலகில் உண்டாக்கப்

பட்ட அவரது பாததூளிகளாகிய ஜனங்கள் எல்லோரும் சூத்திரர்களே. ஆனால், இவர்கள் படிப்படியாய் பகவானுடைய முகம் (ஞானோற்பத்திஸ்தலம்) ஆகும்படியான யோக்யதையை அடையக்கூடும்''. ஆனால் அவருக்கு ஒரு அங்கம் குறைவுபட்டால் பகவான் என்ற நாமத்தையடைய முடியாது.

இங்ஙனமிருக்க, நாம் ஏன் உயர்வு தாழ்வு பேசிக் காலத்தைக் கழிக்கவேண்டும்? ஆலோசிக்குமிடத்து நாம் எல்லோரும் பிறப்பில் சூத்திரர்களாகவும் பிரமசர்யர்களாகவும் இருக்கிறோமே தவிர, பிறப்பிலேயே பிராமணன், க்ஷத்திரியன் என்று சொல்வதற்கு நியாயமில்லை. தனத்தை அபேட்சிக்கிற ஒவ்வொருவனும் வைசியன் என்பதற்கு தடைசொல்லக் கூடுமா?

நமது மனைவி மக்கட்கு வயிரக்கற்களால் பதிப்பிக்கப்பட்ட ஆபரணங்களும் கல்லிழைத்த தங்க ஒட்டியாணங்களும் போட்டு மோட்டார் காரிலேறிக் கடலோரம் உலாவப் போகவேண்டுமென்ற எண்ணம் நமக்கு இல்லையோ? நாம்கற்ற அறிவையும், ஞானத்தையும் கூட வியாபாரம் செய்கிறோமே தவிர எவருக்கும் இனமாகக் கொடுக்கவில்லை. இது வைசிய, சூத்ர தர்மத்தைக் காட்டிலும் மிகத் தாழ்ந்தபடியன்றோ? இத்தன்மையில் ஜாதிபேத மேன்? வர்ணாச்ரம மேன்? இஃதெல்லாம் பாமரஜனங்களின் இயற்கையறிவை மாற்றி அன்னோர்களை வீண் மாலையில் அழுத்தவா? பணத்தைச் சம்பாதிக்கவேண்

டிய நிமித்தம் சாத்திரங்களை எழுதி ஒருவருக்கொருவர் துவேஷத்தை ஏன் வருவித்துக்கொள்கிறீர்கள்? இது தர்மமாகுமா? "பொய் சொல்லாதே" 'திருடாதே' "சத்யவானுயிரு" என்று வேதம் கூறுவதை எள்ளளவும் அப்யசிக்க முயலாத நமக்கு பிராமணன் என்ற அகங்கையேன்? வக்கீல்களாகவும், வாத்திமார்களாகவும், கணக்கர்களாகவு மிருந்து நிமிஷமொன்றுக்கு ஆயிரக்கணக்கான பொய்யைக் கூடை கூடையாக அளக்கிறவர்களுக்கு ஆரியர் (மேலோர்) என்ற பட்டம் ஏன்?

பகவான் யாரை உயர்ந்தவன், மேலோன் என்று சொல்லுகிறார்? "எவன் இந்திரியங்களை மனத்தால் அடக்கிக்கொண்டு கர்மேந்திரியங்களால் கர்மயோகத்தைக் கற்றவனாய் அனுஷ்டிக்கிறானோ அவன் மேலானவன்" காமக் குரோத மோக லோபங்களில் ஒன்றையாவது ஒருக்கணமும் அடக்காத நமக்கு உயர்வு எவ்விதம் ஏற்படும்? ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனச்சாக்ஷி யறியச்சொல்லுங்கள்.

தவிர, கீதை 9-வது அத்யாயம் 29-வது ஸ்லோகத்தின் "ஸமோ அகம் ஸர்வபூதேஷு நமேத்வேஷ்யோ அஸ்திந" "யான் சகலப் பிராணிகளிடத்திலும் ஸமமாக இருக்கிறேன். எனக்குப் பகையானவன் இல்லை. பிரியமானவன் இல்லை" என்றும், 5-வது அத்யாயம் 18-வது ஸ்லோகத்தில்,

"வித்யாவிநய ஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்தினி ஸுநிச்சைவஸ்வபாகே பண்டிதாஹா ஸமதர்சினஹ." அதாவது "கல்வியும் ஒழுக்கமு முள்ள பிராமணனிடத்திலும் ஆவினிடத்திலும் யானையினிடத்திலும் நாயினிடத்திலும் நாயை உண்போனிடத்திலும் ஒன்றே சாண்பார் ஞானியர்" என்று பகவான் ஸிருஷ்டிகர்த்தாவாகவும் வழிகாட்டியுமா யிருந்து நமக்குச் சமதிருஷ்டி இல்லாமற் போவது என்னவிபரீதமோ? காஷ்ட லோஷ்டங்களைச் சமமாக நினைக்கின்றவன் எவனோ அவன் பிராமணன். ஓடும் பொன்னும் ஒப்பப் பார்ப்பவன் பார்ப்பனன். அப்பிராமணனைத் தான் "பிராமணு தேவதாஸ்வரூபி" என்று வேதங்கள் முறையிடுகின்றன.

அப்படியிருக்க, மெய் வாய் கண் மூக்கு செவி முதலிய அங்க அடையாளங்களிலும், காமக்குரோத லோப முதலிய குணம் குறிகளிலும் ஒரு சிறிதும் வேறுபாடில்லாத நாம் உயர்வு தாழ்வு பேசுவது என்னே?

"மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலம் சுமக்க மாட்டே னென்னுமோ
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ
வாழ்நான்கு ஜாதிக் குணவு நாட்டிலும்,
கீழ்நான்கு ஜாதிக் குணவு காட்டிலுமோ?
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்,
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே!
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே,

இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே. ஆதலால்
முன்னோர் உரைத்த மொழி தவறுமல்
எந்நா ளாயினும் இறப்பவர்க் கிட்டு,
புலையும் கொலையும் களவும் தவிர்த்து
நிலைபெற அறத்தின் நிற்பதை யறிந்து
ஆணும் பெண்ணும் மல்லதை யுணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது,
சிறப்புஞ் சீலமும் அல்லது
பிறப்பு நலம் தருமோ, பேதையீரே"

என்று கபிலரும், "ஜாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே சாத்திரச் சண்டையிலே சோத்திரக்குப்பையிலே ஆதியிலே யபிமானத் தலைகின்ற உலகீர்"என்று இராமலிங்க ஸ்வாமிகளும கூறும் பாக்களைக் கவனிக்கவேண்டாமா?

நமது தேகத்தின்பகுதிகளாகிய தலை,உடல், கைகால்கள் என்ற ஒவ்வொரு அங்கங்களும் தான் தான் மேலானது என்றால் எவ்வாறு பொருந்தும்? மூன்றும் கூடினபோதன்றோ சரீரமென்றாகி கோரின காரியத்தைச் செய்யமுடியும்?

ஆகையால், முக்கியமாய் பாகுபாடு செய்யப்பட்ட சகல ஜீவராசிகளுள் இயற்கையாகவே எண்ணிக்கையில் சரிக்குச் சரியானதும், ஏறக்குறைய ரூபத்திலும். குணத்திலும், சமத்துவமுமான பிரிவு ஆண், பெண் இரண்டே. இப்பிரிவு தான் ஆதியாயுள்ளது, இயற்கையிலுண்டானது, சத்தியமானது அந்தந்த ஜீவராசிகளுள் அததற்கு ஏற்ப உள்ளது. மனித அறிவினால் தடைப்ப

டுத்த முடியாதது ஆண் பெண்ணுகவும் பெண் ஆணுகவும் மாற்றிக்கொள்ள முடியாதது. வம் சவிருத்திக்கு இன்றி யமையாதது எவராலும் இதன் உண்மையை ஆட்சேபிக்க முடியாதது. ஒரு ஜாதி ஆண் மற்றொரு ஜாதிப் பெண்ணுடன் சம்பந்தம் செய்து கொள்ள முடியாது. நாய் நரியோடு சேராது, புலி பூனையைப் புணராது, அணில் ஆமையை அணையாது, காகம் கருடனைக் கலவாது, மான்மாடோடு இணையாது, பனையிற் பாக்கு பழுக்காது, தென்னையிற் பனை ஒட்டாது, இம்மாதிரி தனித்தனியா யுள்ளதுஒரு ஜாதி இது தான் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டது. இதுதான் சாஸ்திரயுக்தி அனுபவத்திற்கு ஒப்பானது. இதற் குப் புறம்பாயுள்ள தெல்லாம் காலதேச வர்த்த மானங்களுக்கு இசைந்தவண்ணம் அவரவர்கள் சுயநன்மையை (Selfishness) உத்தேசித்து எழு திவைத்துக் கொண்ட தென்பதை உணர்ந்து நாமெல்லோரும்ஒரேதகப்பனிடமிருந்துஉண்டா னவர், ஏக குடும்பத்தவர், என்ற சகோதரவாஞ் சை யிருந்தால் மட்டும் கடவுள் எதற்காக மானு ஷ்ய கோடிகளைச் சிருஷ்டித்தாரோ அந்தக்காரி யம் சரிவர நிறைவேறும்.

ஒருவன் செய்யும் தொழிலைக்கொண்டு நாம் ஒருவனைத் தாழ்வாகவும் மற்றொருவனை உயர்வா கவும் பேசுவோமானுல் நம்முடன் பிறந்து ஏழை யாயிருக்கிற சகோதரனை என் சகோதரனல்ல, உடன்பிறந்தவனல்ல, அவன் தகப்பன் வேறு என் தகப்பன் வேறு என்று சொல்வதற் கிரங் பாகும். நம் தேச முன்னேற்றத்தைத் தடைப்

படுத்தியதும்,, தடைப்படுத்துகிறதும் நம்மை இவ்வாறு சீர்குலையச்செய்ததும் நமக்குள்ளிருக்கும் ஜாதி வித்யாசமென்ற பெரிய சமுத்திரம் தான். இவ்வித ஜாதி விவகாரங்களினால் எத்தனையோ குடும்பங்கள் பரம ஏழைகளாகிக்கஞ் சிக்குபஞ்சாய்ப் பறக்கின்றன. இதரதேசங்களைப் போல் நாம் ஒரு நேஷன் (Nation) ஆகவேண்டுமென்றால் நமக்குள்ளிருக்கும் லக்ஷக்கணக்கான ஜாதிபேதங்களை வேரறுத்து சகோதர பாவனையை இனியாவது கையாடவேண்டுமென்பது அவசியத்தினும் அவசியம்.

ஆகையால் சகோதரர்களே! உத்தம சீலர்களே! நாம் 'இந்தியர்' என்ற ஒரு பெயரால் குறிக்கப் படவேண்டுமென்றால் நாம் நம்மிடமிருக்கும் ஜாதிபேதத்தை உடனே விலக்க வேண்டும். இவ்வித்தியாசத்தை விலக்குவதில் ஊக்கமற்றஎவரும் தேசாபிமானியாக மாட்டார்.

விடுங்கள் ஜாதிபேதத்தை! தேடுங்கள் ஒற்றுமையை!! நாடுங்கள் சகோதரபாவனையை!!!

"ஸர்வேஜனாக் சுஹிநோபவந்து"

ஓம் தத்சத்.

"இது விஸ்வகர்மன் தொழில்" பத்திரிகை 1920ஆ 17-வது சம்புடம் 7-வது சஞ்சிகை முதல் 13-வது சஞ்சிகை வரையில் பிரசுரிக்கப் பட்டதிலிருந்து எடுக்கப்பட்டது.

பிரசுரம்: கு. ப. வே. ஆச்சாரியன், திருச்சி.

Viswakulotharana Press, Chintadripet, Madras.